<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.</u>

<u>O.S. No.213/2016</u>

**<u>நாள்.29.01.2026</u>**

**<u>வா.சா. 1</u>- சுந்தர்**

**<u>2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசார ணை</u>**

1வது வாதியும், 1வது பிரதிவாதியும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். மேற்படியார்களின் தகப்பனார் பெயர் சின்னச்சாமி என்றால் சரிதான். மேற்படி சின்னச்சாமியின் தகப்பனார் பெயர் சிவன் என்றால் சரிதான். மேற்படி சின்னச்சாமியின் மனைவி பெயர் வீரம்மாள் என்றால் சரிதான். மேற்படி சின்னச்சாமி, வீரம்மாள் உயிருடன் இல்லை என்றால் சரிதான். மேற்படி சின்னச்சாமியின் உடன்பிறந்தவர் பெயர் என்ன என்றால் பொன்னாண்டி. வழக்கு 1வது தபசில் சொத்திற்கு கிழக்கில் மேற்படி சின்னச்சாமியின் உடன்பிறந்தவர் பொன்னாண்டிக்கு சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். வழக்கு 1வது தபசில் சொத்திற்கு மேற்கில் பழங்கோட்டை வருவாய் கிராமம் உள்ளது என்றால் சரிதான். வழக்கு 1வது தபசில் சொத்தினை யாரிடம் கிரையம் வாங்கினோம் என்றால் வேதநாயகம், பால்துரை, முத்துச்சாமி மற்றும் செந்தாமரையிடமிருந்து எனது அப்பா கிரையம் வாங்கினார். வழக்கு 1வது தபசில் சொத்தினை கிரையம் வாங்குவதற்கு முன்பு வேதநாயகம், பால்துரை, முத்துச்சாமி மற்றும் செந்தாமரை பெயரில் மேற்படி சொத்திற்கான பட்டா இருந்ததா என்றால் UDR க்கு முந்தைய பட்டா இருந்தது. வேதநாயகம், பால்துரை, முத்துச்சாமி மற்றும் செந்தாமரை பெயரில் வழக்கு 1வது தபசில் சொத்திற்கு UDR க்கு முந்தைய பட்டா இருந்தது என்பதைக் காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. வா.சாஆ.1 கிரைய ஆவணம் எழுதப்பட்ட பிறகு வழக்கு 1வது தபசில் சொத்திற்கு எனது தந்தை பெயரில் பட்டா இருந்ததா என்றால் பட்டா இருந்தது. வழக்கு 1வது தபசில் சொத்திற்கு 2வது பிரதிவாதி முத்துப்பாண்டி பெயரில் பட்டா இருந்ததா என்றால் ஆமாம் 2010 க்கு பிறகு 2 வது பிரதிவாதி முத்துப்பாண்டி பெயரில் பட்டா இருந்தது. 2வது பிரதிவாதி முத்துப்பாண்டி பெயரில் பட்டா இருந்ததை ரத்து செய்ய கேட்டு கோட்டாட்சியரிடம் மனு கொடுத்தோம் என்றால் சரிதான். மேற்படி கோட்டாட்சியரிடம் கொடுக்கப்பட்ட மனுவில் 2வது வாதியான எனது அம்மாவிற்கு வழக்கு 1வது தபசில் சொத்து கிரையம் மூலமாக பாத்தியப்பட்டது என சொல்லியுள்ளோம் என்றால் சரிதான்.

கோட்டாட்சியரிடம் கொடுக்கப்பட்ட மனுவில் நடத்தப்பட்ட RDO விசாரணை பற்றிய விவரங்களையும், 2 வது வாதியான எனது அம்மாவிற்கு வழக்கு 1வது தபசில் சொத்து கிரையம் மூலமாக பாத்தியப்பட்டது என்ற விபரங்களையும் இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். 2 வது வாதியான எனது அம்மாவிற்கு வழக்கு 1வது தபசில் சொத்து கிரையம் மூலமாக பாத்தியப்பட்டது என்பதைக் காட்ட கிரைய ஆவணம் என் கைவசம் உண்டா என்றால் என் கைவசம் உண்டு அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். RDO விசாரணையில் கொடுத்த மனுவும் என் கைவசம் உண்டு அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என்றால் சரிதான். வழக்கு 1வது தபசில் சொத்து வா.சா.ஆ.1 ஐ எழுதிக்கொடுத்த வேதநாயகம், பால்துரை, முத்துச்சாமி மற்றும் செந்தாமரை ஆகியோர்களுக்குப் பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. எனது தந்தை உரிமையில்லாத நபர்களிடமிருந்து வழக்கு 1வது தபசில் சொத்தினை வா.சா.ஆ.1 மூலமாக கிரையம் பெற்றுள்ளார் அதனால் மேற்படி கிரையம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. அதனால் தான் எனது தகப்பனார் பெயரிலான பட்டா ரத்து செய்யப்பட்டு 2 வது பிரதிவாதி பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. RDO விசாரணையில் சொன்ன விபரங்களுக்கு முரணாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு 2 வது தபசில் சொத்து 1வது வாதிக்கும், 1வது பிரதிவாதிக்கும் இடையே நடைபெற்ற வாய்மொஹழ பாகப்பிரிவினை மூலமாக 1வது வாதிக்கு கிடைத்ததாக வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 2 வது தபசில் சொத்து குறித்து 1வது வாதிக்கும், 1 வது பிரதிவாதிக்கும் இடையே எந்தஆண்டு வாய்மொழி பாகப்பிரிவினை நடைபெற்றது என்றால் 1978 ல். மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினை விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது என் அப்பா, அம்மா சொன்னார்கள் அதனால் தெரியும். மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினை விபரம் யார் முன்னிலையில் நடைபெற்றது என்றால் எனக்குத் தெரியாது. மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினையில் 1 வது வாதி மற்றும் 1 வது பிரதிவாதிக்கு என்னென்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது எனக்குத் தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது என் அம்மா, அப்பாவிற்கு தான் தெரியும். நான் சொல்வது போல் 2 வது தபசில் சொத்து குறித்து 1வது வாதிக்கும், 1வது பிரதிவாதிக்கும் இடையே வாய்மொழி பாகப்பிரிவினை நடக்கவில்லை வழக்கிற்காக பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. RDO விசாரணையில் எனது தாத்தா சின்னச்சாமி, 2 வது பிரதிவாதி முத்துப்பாண்டிக்கு உயில் ஆவணம் 1996 ல் பிறப்பித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

எனது தாத்தா சின்னச்சாமி, 2 வது பிரதிவாதி முத்துப்பாண்டிக்கு உயில் ஆவணம் எழுதப்பட்ட விபரம் எனக்கு எழுதப்பட்ட 1996 காலகட்டத்திலேயே தெரியும் என்றால் சரிதான். எனது தாத்தா 2 வது பிரதிவாதி முத்துப்பாண்டிக்கு உயில் ஆவணம் 1996 ல் பிறப்பித்துக்கொடுத்ததை நான் மறுக்கவில்லை ஆனால் 2 வது பிரதிவாதி முத்துப்பாண்டிக்கு சொத்தில் உரிமை இல்லை என கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். எனது தாத்தாவிற்கு கையெழுத்து போடத் தெரியும் என்றால் சரிதான். எனது தாத்தாவின் கையெழுத்தினை ஆவணங்களில் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். எனது பாட்டி வீரம்மாளுக்கு எழுதப்படிக்கத் தெரியாது கைநாட்டு போடுவார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 13.09.1996 உயில் ஆவணத்தில் இருப்பது எனது தாத்தாவின் கையெழுத்து என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை அது உண்மையா பொய்யா என்று தெரியவில்லை முந்தைய ஆவணங்களைப் பார்த்தால் தான் தெரியும். 1 வது வாதி, 1 வது பிரதிவாதி இடையே வாய்மொழி பாகம் நடைபெற்ற 1978 காலகட்டத்தில் எனது தாத்தா உயிருடன் இருந்தாரா என்றால் உயிருடன் இருந்தார். வழக்குச் சொத்துக்களுக்கு ஆரம்பத்தில் எனது தாத்தா பெயரில் தான் பட்டா இருந்தது என்றால் சரிதான். எனது தாத்தா உயிருடன் இருக்கும் வரை வழக்குச் சொத்துக்களை அனுபவித்து வந்தார் என்றால் தாத்தாவின் மக்கள் தான் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் 1978 ல் வாய்மொழி பாகம் நடந்தபிறகு தனித்தனியாக அனுபவித்து வந்தார்கள். எனது தாத்தா உயிருடன் இருக்கும் வரை வழக்குச் சொத்துக்களை அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்துக்களின் பழைய ஜமீன் அடங்கல் எண் 1022, 1025, 1023 என்றால் சரிதான். 1 வது தபசில் சொத்தின் பழைய அடங்கல் எண்.1025 என்றால் சரிதான். சர்வே எண். 78 ன் மொத்த விஸ்தீரணம் 10 ஏக்கர் 8 சென்ட் என்றால் சரிதான். சர்வே எண். 78 ன் மொத்த விஸ்தீரணம் 10 ஏக்கர் 8 சென்ட் ஆதியில் லட்சுமி நாயக்கர் குமாரர் கந்தசாமி நாயக்கர், சங்கவ நாயக்கர், குருசாமி, சந்திரன், குழந்தைவேலு, சபரிமுத்து, செல்லையா ஆகியோர்கள் பெயரில் UDR க்கு முந்தைய பட்டா இருந்தது என்றால் சரிதான். எனது தாத்தா அவரது சகோதரர் பொன்னாண்டி சேர்த்து லட்சுமி நாயக்கர் குமாரர் கந்தசாமி நாயக்கரிடமிருந்து 16.12.1961 ல் 1 ஏக்கர் 14 சென்ட்டை கிரையமாக வாங்கியிருந்தார்கள் என்றால் அதற்கான பத்திரம் எதுவும் கிடையாது. மேற்படி 1 ஏக்கர் 14 சென்ட்டை எனது தாத்தா அவரது சகோதரர் பொன்னாண்டி பாகம் வைத்துக்கொண்டதில், எனது தாத்தாவிற்கு மேல்பக்கமுள்ள 1 வது தபசில் சொத்தும், கீழ்பக்கமுள்ள 56 சென்ட் பொன்னாண்டிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 2 வது தபசில் சொத்து எனது தாத்தாவிற்கு 17.04.1961 தேதியிட்ட கிரைய ஆவணம் மூலமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

2 வது தபசில் சொத்து எனது தாத்தா கிரையம் வாங்க முழுவதுமாக தனித்து அனுபவித்து வந்தார் என்றால் அனைவரும் கூட்டுக்குடும்பமாக அனுபவித்தார்கள் எனது தாத்தா தனித்து அனுபவிக்கவில்லை 1978 க்கு பிறகு எனது தாத்தாவின் வாரிசுகள் தனித்தனியாக பிரித்து அனுபவிக்கிறார்கள். வழக்கு தபசில் 1, 2 சொத்துக்கள் எனது தாத்தாவிற்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்டு, தனித்து அனுபவிக்கப்பட்டு வந்த சொத்துக்கள் என்றால் சரியல்ல. வழக்கு தபசில் 1, 2 சொத்துக்கள் குறித்து உயில் ஆவணம் பிறப்பிக்க எனது தாத்தாவிற்கு முழு உரிமை உண்டு என்றால் சரியல்ல. 2 வது பிரதிவாதி முத்துப்பாண்டியின் உடன்பிறந்தவர் ஸ்ரீசிவக்குமார் என்றால் வெள்ளைச்சாமியின் 2 வது மனைவியின் மகன் தான் ஸ்ரீசிவக்குமார். மேற்படி முத்துப்பாண்டி மற்றும் சிவக்குமார் தனித்தனியாக சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனது தாத்தா உயில் ஆவணத்தை மேற்படி முத்துப்பாண்டி மற்றும் சிவக்குமார் ஆகியோருக்கு சேர்த்து எழுதி வைத்திருந்தார் என்றால் சரிதான். எனது தந்தை எனது தாத்தா இறந்தபிறகு, உயில் ஆவணம் நடைமுறைக்கு வந்து தபசில் சொத்துக்களைப் பொறுத்து 2 வது பிரதிவாதி முத்துப்பாண்டியின் பெயரில் பட்டா ஏற்பட்டு அவர் தனித்து அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் 2 வது பிரதிவாதி முத்துப்பாண்டியின் மனைவி 3 வது பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் பிறப்பிக்க முழு உரிமை உண்டு என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் 3 வது பிரதிவாதிக்கு 4 மற்றும் 5 வது பிரதிவாதிக்கு அடமானம் ஆவணம் பிறப்பிக்க முழு உரிமை உண்டு என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளால் எழுதப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் அடமானம் ஆவணம் குறித்து கேள்வி எழுப்ப எனக்கு சட்டப்படியான உரிமை கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 அடமான ஆவணம் எழுத 1 வது வாதி மற்றும் அவரது மக்களுக்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 பட்டா உரிய அலுவலர்களால் ரத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.ச.ஆ.3 அடமான பணப்பற்று ரசீது எங்களுக்கு தபசில் சொத்தில் எந்தவித உரிமையும் ஏற்படுத்தாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 முதல் 16 ஆவணங்கள் எங்களுக்கு தபசில் சொத்தில் எந்தவித உரிமையும் ஏற்படுத்தாது என்றால் சரியல்ல. தபசில் சொத்துக்கள் இதுநாள்வரை 2 மற்றும் 3 பிரதிவாதிகளின் அனுபவத்தில் தான் உள்ளது என்றால்சரியல்ல. நான் உண்மை விபரங்களை மறைத்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குரை பரிகாரங்கள் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.01.29 18:56:52 +0530